# COLOMBO COMMERCE RESOURCE CENTRE
## கொழும்பு வணிகவள நிலையம்

மாதிரி வினாத்தாள் - 02

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை - 2017

வரலாறு - I

நேரம் : 1 மணி

* எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
* விடைகளை புள்ளடித்தாளின் மீது (x) என அடையாளமிடுக.

(1) புராதன மனித நடவடிக்கைகள் பற்றிய தகவல்களை பெறக்கூடிய அறிக்கைகள் மற்றும் ஆக்கங்கள் எவ்வாறு குறிப்பிடப்படும்?

(1) இலக்கிய மூலாதாரங்கள் (2) மூலாதாரங்கள்
(3) நாணய விஞ்ஞானம் (4) குகைகள்

(2) இலங்கையின் வரலாற்றைப் பற்றி நூலொன்றை எழுதிய ரிபைரோ எவ் இனத்தவர்?

(1) ஒல்லாந்தர் (2) போர்த்துக்கேயர் (3) ஆங்கிலேயர் (4) பிரான்சியர்

(3) பனாகடுவ செப்புச்சாசனத்தில் 'துருபுரம்' எனக் குறிப்பிடப்பட்டுள்ள நகரம் எது?

(1) ருகுணுபுரம் (2) மாகம்புர (3) அனுராதபுரம் (4) பொலனறுவை

(4) 'கெதிஅட' மற்றும் 'கெடுகனக' எனும் வரிகளை நீக்கிய மன்னன்

(1) வசபன் (2) முதலாம் விஜயபாகு (3) அமண்டகாமினி (4) நிஸ்ஸங்கமல்லன்

(5) வரலாற்று மூலாதாரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளபடி இந்நாட்டின் முதல் மன்னன்

(1) துட்டகைமுனு (2) விஜயன் (3) 2ம் பாதிய (4) பண்டுகாபயன்

(6) "இரணைமடுப் படிவுகள்" எவ் யுகத்திற்குரியதாகக் கருதப்படுகின்றது?

(1) மயோசீன் (2) கேம்பிரியன் (3) றெலோசீன் (4) பிளைத்தோசின்

(7) பருமக என்பவர் ஏதாவதொரு வகையில் பிரதேசத்தின் நிர்வாக அமைப்பைக் கொண்டிருந்தார் என்பதனைக் காண்பிக்கும் கல்வெட்டு எது?

(1) சிதுல்பவ்வ (2) கண்டலம (3) பெரியகுளம் (4) அம்பாந்தோட்டை

(8) "தில சங்குலிக்கா" என தம்பியா அட்டவா கற்றபதய நூலில் குறிப்பிடப்படும் விடயம் யாது?

(1) எள்ளுருண்டை (2) நல்லெண்ணெய் (3) தேங்காயெண்ணெய் (4) நெய்

(9) முதலாவது "சந்தேச காவியம்" எழுந்த யுகம்

(1) கம்பளை (2) கோட்டை (3) கண்டி (4) குருணாகல்

(10) தெடிகம யானை விளக்கு நிர்மாணத்தின் மூலம் புராதன பொறியியலாளர் பற்றிய எவ்விஞ்ஞான அறிவு வெளிப்படுத்தப்பட்டது

(1) பௌதிக விஞ்ஞானம் (2) இரசாயன விஞ்ஞானம்
(3) உயிரியல் (4) சூழல் விஞ்ஞானம்

(11) குருவிட்ட பிரதேசத்திலமைந்துள்ள குகை எது?

(1) பெலிலென (2) அலுலேன (3) பட்டதெம்பலேன (4) பாகியன்கல

• பின்வரும் விடயங்களை அவதானித்து 17, 18ஆம் வினாக்களுக்கு விடை தருக.

A - கிரேக்க, உரோம நாகரிகத்தைச் சேர்ந்த கற்றறிந்தவர்கள் ஐரோப்பாவிற்குச் சென்றமை.

B - வர்த்தகம், உற்பத்தி மற்றும் வங்கி நடவடிக்கைகள் என்பவற்றில் முதலீடு செய்யும் செல்வந்தர்கள் உருவானமை.

C - மறுமலர்ச்சிக்கான உடனடிக் காரணமானது

D - கத்தோலிக்க திருச்சபையின் ஊழல்களை விமர்சித்தமை

E - மெடிசி எனும் செல்வந்த குடும்பம் அனுசரனை வழங்கியமை

(12) கி.பி 1453ல் கொன்ஸ்தாந்திநோபிள் துருக்கியர் வசமாவதில் செல்வாக்கு செலுத்திய காரணங்களாவன

(1) AC (2) AB (3) BD (4) CE

(13) இத்தாலியில் கலைகள் மறுமலர்ச்சி ஏற்படுவதற்குக் காரணமாயமைந்த விடயங்கள்

(1) BC (2) BE (3) AE (4) DE

• பின்வரும் அட்டவணையிலுள்ள A தொடக்கம் I வரையான விடயங்களைக் கொண்டு 14 - 15 ஆகிய வினாக்களுக்கு விடையளிக்குக.

| வருடம் | மன்னர் | ஆளுநர் |
|---|---|---|
| A. 1619 | D. ஸ்ரீ விக்கிரமராஜசிங்கன் | G. பன் எங்கள் பெக் |
| B. 1802 | E. 1ம் விமலதர்மசூரியன் | H. பிலிப் டிலுலிவேரா |
| C. 1706 | F. ராஜாதி ராஜசிங்கன் | I. பிரட்டிக் நோர்த் |

(14) போர்த்துக்கேயருக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையிலான தொடர்பினை வெளிப்படுத்தும் விடை எது?

(1) AFH (2) CFH (3) AFI (4) CFG

(15) இந்நாட்டில் பிரித்தானிய நிர்வாகம் பற்றிக் குறிப்பிடும் விடை தொகுதி எது?

(1) BEG (2) CFG (3) BDI (4) CDI

• 16, 17. 18 ஆகிய வினாக்களில் காணப்படும் இடைவெளிக்குப் பொருத்தமான விடையினைத் தெரிக.

(16) 1779ல் ........................................ என்பவரால் மென்மையானதும் சக்தி வாய்ந்ததுமான நூல் நூற்கும் இயந்திரத்தைக் கண்டுபிடித்தார்.

(1) எட்மன்ட் காட்ரைட் (2) சாமுவெல் குரொம்டன்

(3) ஜேம்ஸ் விறாகீறீவ்ஸ் (4) ரிச்சட் ஆக்ரைட்

(17) கி.பி 9ம் நூற்றாண்டில் பொறிக்கப்பட்ட கல்வெட்டில் கொடுப்பனவின் தூய்மையை குறிக்கும் குறியீடு ....................................................

(1) அன்னம் (2) விசிறி (3) சந்திரப்பிறை (4) செங்கோல்

(18) மலையகத்தில் ஆங்கிலேயரின் ஆதிக்கம் ................................... முழுமை பெற்றது.
(1) 1815 உடன்படிக்கையுடன் (2) 1818 வெற்றியுடன் (3) 1848 கிளர்ச்சியுடன்
(4) 1818 பிரகடனத்துடன்

• பின்வரும் கூற்றுக்களை அவதானித்து 19, 20 ஆம் வினாக்களுக்கு விடை தருக.

A - பௌத்த மதத்திற்கு எதிரான கொள்கை
B - சிறந்த வீரன்
C - சீதாவாக்கை இராச்சியத்திற்கு கடற்படை பலம் இல்லாமை
D - வீரசுந்தர பண்டாவை கொலை செய்தமை
E - தொனா கதரீனாவை மணந்து அரசுரிமையைப் பெறல்

(19) முதலாம் இராஜசிங்கன் காலத்தில் சீதாவாக்கை இராச்சியம் வீழ்ச்சியுற்றமைக்கான காரணங்களாவன
(1) A மற்றும் D (2) C மற்றும் D (3) A மற்றும் B (4) B மற்றும் D

(20) முதலாம் விமலதர்மசூரியன் மலையக இராச்சியத்தின் அரசுரிமையைப் பெற்றுக் கொள்வதில் செல்வாக்கு செலுத்திய காரணிகள்
(1) B மற்றும் C (2) D மற்றும் E (3) C மற்றும் D (4) B மற்றும் E

(21) யாழ்ப்பாண ஆரியச்சக்கரவர்த்தியின் அனுசரணைப் பெற்று 1344ல் சிவனொளிபாத மலைக்கு யாத்திரை சென்ற வெளிநாட்டவர் யார்?
(1) இபன்பதூதா (2) சென்ஷேறா (3) றொபேட் றொக்ஸ் (4) அல்பஸ்சூரி

• பின்வரும் **ABCD** எனத் தரப்பட்டுள்ள சோடிக் கூற்றுக்களை அவதானித்து 22 - 25 வரையான வினாக்களுக்கு விடையளிக்குக.

A) 1. நடுநிலமை வகித்தல்
2. லூசிதானியா கம்பலை தாக்கியமை

B) 1. அணுகுண்டு பாவனை
2. சூழல் மாசடைதல்

C) 1. பேரரசுக் கொள்கை
2. குடியேற்ற நாடுகளை விடுவித்தல்

D) 1. 2ம் வில்லியம் மன்னனின் நடவடிக்கைகள்
2. 2ம் உலகமாநாடு

(22) முதலாவதும் இரண்டாவதும் தொடர்பற்ற கூற்றுக்களைக் கொண்டது
(1) A (2) D (3) C (4) B

(23) முதலாவது விடயத்தின் தோல்வி இரண்டாவது விடயத்தின் வெற்றிக்கு காரணமாயமைவது
(1) A (2) B (3) D (4) C

(24) இரண்டாவது விடயமாயமைந்த செயற்பாடு முதலாவது விடயத்தின் மாற்றத்திற்கு காரணமாயமைந்த கூற்று
(1) A (2) B (3) C (4) D

(25) முதலாவது விடயம் இரண்டாவது விடயத்திற்குப் பிரதான காரணமாயமைவது
(1) A (2) B (3) C (4) D

(26) கோல்புறூக் ஆணைக்குழு இலங்கை வந்ததன் பிரதான நோக்கம் யாது?
(1) கட்டாய சேவை இராஜகாரிய முறையை நீக்கல்
(2) அரசாங்கத்தின் செலவு வருமானத்தை விட அதிகரித்தமை
(3) ஆளுநரின் அதிகாரங்களை குறைத்தல்
(4) ஒருங்கிணைந்த ஆட்சிமுறையை உருவாக்கல்

(27) "இப்பயிர் ஏனைய பயிர்களைப் போன்று முற்றுமுழுதாக ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்டு பயிரிடப்படும் பயிரல்ல" இது எப்பயிர்ச் செய்கையை குறிக்கின்றது?
(1) தேயிலை (2) இறப்பர் (3) தென்னை (4) கோப்பி

(28) 1956 தேர்தலில் வெற்றி பெற்ற கட்சி
(1) மக்கள் ஐக்கிய முன்னணி (2) இலங்கை சுதந்திரக்கட்சி
(3) ஐக்கிய தேசிய கட்சி (4) கமியூனிஸ்ட் கட்சி

(29) இந்நாட்டின் முதலாவது நாம நிர்வாகியான ஜனாதிபதி யார்?
(1) சேர்மன்க் மேசன்மூர் (2) சேர். ஜோன் கொத்தலாவ
(3) வில்லியம் கொபல்லாவ (4) சேர். ஒலிவர் குணதிலக

(30) முழு நாட்டினதும் மிக உயர்ந்ததும் இறுதியுமான நீதிவழங்கல் அதிகாரத்தைக் கொண்டுள்ள நீதிமன்றம் எது?
(1) முதல் நிலை நீதிமன்றம் (2) மாவட்ட நீதிமன்றம்
(3) மேல் நீதிமன்றம் (4) உச்ச நீதிமன்றம்

(31) 1756 - 1763 காலப்பகுதியில் நடைபெற்ற ஏழாண்டு யுத்தத்தில் ஈடுபட்ட இரு நாடுகளும்
(1) பிரித்தானியாவும் ஜேர்மனியும் (2) பிரான்சும் பிரித்தானியாவும்
(3) பிரான்சும் ஒல்லாந்தும் (4) பிரித்தானியாவும் USA

(32) பஸ்தீல் சிறைச்சாலை எப்புரட்சியுடன் தொடர்புடையது?
(1) ரஷ்யப்புரட்சி (2) பிரான்சியப்புரட்சி
(3) அமெரிக்க சுதந்திரப்போர் (4) சீனப்புரட்சி

(33) ரஷ்யப் புரட்சியின் விளைவாக உலகில் பரவிய சமவுடமைவாதக் கொள்கைளை ஏற்றுக்கொள்ளாத நாடு
(1) பிரான்ஸ் (2) கியூபா (3) தென் கொரியா (4) சீனா

(34) பின்வருவனவற்றுள் முதலாம் உலக யுத்தத்திற்கு ஏதுவான காரணம் யாது?
(1) ஹிட்லரின் நடவடிக்கைகள் (2) ஐக்கிய நாடுகள் சபையின் தோல்வி
(3) பிஸ்மார்க்கின் கொள்கைகள் (4) ஜப்பானிய நடவடிக்கைகள்

(35) ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச நீதிமன்றத்தின் தலைமையகம் அமைந்துள்ளது சுவிற்சர்லாந்தின்
(1) ரொட்டர்டாம் நகரில் (2) ஹலேம் நகரில்
(3) அம்ஸ்டர்ராம் நகரில் (4) ஹேக் நகரில்

# COLOMBO COMMERCE RESOURCE CENTRE
## கொழும்பு வணிகவள நிலையம்

மாதிரி வினாத்தாள் - 02

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை - 2017

வரலாறு - II | நேரம் : 2 மணி

* பகுதி I இன் முதலாம் வினா கட்டாயமானது.
* பகுதி I இன் முதலாம் வினாவுடன் பகுதி II இல் இன்னும் நான்கு வினாக்களும் விடை அளிக்க வேண்டும்
* பகுதி III இல் ஒரு வினாவுக்கும் விடை அளிக்க வேண்டும்
* எல்லாமாக ஆறு வினாக்களுக்கு விடை அளிக்க வேண்டும்

### பகுதி - I

01) அ) பின்வரும் வரலாற்று இடங்களை இலங்கை புற உருவப்படத்திலும் உலகப்படத்திலும் குறித்து பெயரிடுக.

1) கலா ஓயா, குருவிட்ட, கேகாலை, மின்னேரியாக்குளம், தேவநகர, இரத்தினபுரி, அலுகல்லே குகை, காலதித்த, உருவெல, மாதுறுஓயா நீர்த்தேக்கம், இரணைமடு, லுனுவில

2) செங்கடல், லிஸ்பன், கொன்ஸ்தாந்தி நோபிள், சுமாத்ரா, பிரித்தானியா, வொசிங்டன்

ஆ) கீழே A,B,C,D என்ற வரலாற்று தகவல்களோடு தொடர்புடைய நபர்களையும் அதே ஒழுங்கில் தருக.

A - பத்துக் கிராமங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வண்ணம் அதன் தலைவர்களைக் கொண்ட குழு

B - இந்நாட்டில் முதன்முதலாகப் பாரிய குளங்களை அமைத்த மன்னன்

C - மலையகத்தை கைப்பற்றியதன் பின்னர் மலையக நிர்வாகத்திற்காக நியமிக்கப்பட்ட பிரதிநிதி

D - இலங்கையின் முதல் நாமநிர்வாகியான ஜனாதிபதி

இ) i) 1) இந்த படைப்பு (A) எதனைக் குறிக்கின்றது?

2) இத்தகைய நிர்மானிப்புகள் உருவாக்க பயன்படுத்தப்பட்ட உலோகம் எது?

3) இது எந்த வரலாற்று நகரத்தில் காணப்படுகிறது?

4) இங்கு காணக்கூடிய கலைமரபு யாது?



A

ii) 1) இவர் யார்?

2) அவர் வகித்த பதவி என்ன?

3) இவரிடம் காணப்பட்ட சிறப்பு யாது?

4) இவரது ஆலோசனையால் உருவாக்கப்பட்ட அமைப்பு எது?



B

## பகுதி - II

எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக.

(2) 1) முன் வரலாற்றுக் காலத்தில் கரையோர வெட்ட வெளியில் அமைக்கப்பட்ட 03 குடியேற்றங்களைப் பெயரிடுக.

2) கீழே ABCD எனத் தரப்பட்டுள்ள விடயங்களைப் பற்றி அறியக்கூடிய குகைகளைப் பெயரிடுக.

A - 1250 வருடங்களுக்கு முன்னர் காட்டுப்பலாவின் விதைகளை தீயில் சுட்டு சாப்பிட்டமைக்கான ஆதாரம் கிடைத்துள்ள குகை

B - வளைத்துப் புதைக்கப்பட்ட எலும்புக்கூடு

C - இரண்டாகப் பிளக்கும் வகையிலான துளையிடப்பட்ட மண்டையோடு

D - சிவப்பு நிறப்பாறையை உராய்ந்து பூசப்பட்ட எலும்புக் கூட்டின் பகுதிகள்

3) உடரஞ்சாமடம் கிராமத்தில் கண்டுபிடிக்கப்பட்ட புராதனகால வீடொன்றிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவல்களை எழுதுக.

4) முன் வரலாற்றுக் காலத்தில் குடியிருப்புக்களின் பரம்பலில் செல்வாக்கு செலுத்திய காரணிகள் மூன்றினை விளக்குக.

(3) 1) கீழே ABCD எனத் தரப்பட்டுள்ள சிறப்புப் பெயர்களால் அழைக்கப்பட்ட மன்னர்களைப் பெயரிடுக.

A - நரேஸ்வர (நரஇசெர)

B - அலகபய மகாராஜா

C - காலிங்க சக்கரவர்த்திப் பெருமாள்

2) துட்டகைமுனு மக்களின் நலனைப் பேணுவதில் அக்கறையுடன் செயற்பட்ட சந்தர்ப்பங்கள் இரண்டினை எழுதுக.

3) வசப மன்னன் ஆற்றிய பொருளாதார சேவைகள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக.

4) முதலாம் விஜயபாகுவின் வெளிநாட்டுத் தொடர்புகள் பற்றி 02 விடயங்களை விளக்குக.

(4) 1) பௌத்த விகாரைகளில் பிக்குகளின் நீர்த்தேவைக்காக அமைக்கப்பட்டிருந்த பொய்கைகள் மூன்றினைப் பெயரிடுக.

2) பின்வரும் சொற்களால் குறிப்பிடப்படும் விடயங்களை எழுதுக.

A - பஸவந்தி நாமசால

B - உபசக்க ரோகநாச

C - வெஜ்ஜசாலா

D - சொத்திசாலா

3) புராதன காலத்தில் நடாத்தப்பட்ட பூசைகள் பற்றிக் கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை விளக்குக.

4) புராதன காலத்தில் பெண்கள் தமது உருவ அலங்காரங்களில் கவனம் செலுத்திய விதத்தினை எடுத்துக் காட்டுக்களுடன் விளக்குக.

(5) 1) ஐரோப்பியர் ஆசியாவிற்கு வருகை தந்தமைக்கான காரணங்கள் மூன்றினை தருக.

2) பின்வரும் விடயங்களோடு தொடர்புடையோரை ABCD எனும் ஒழுங்கில் எழுதுக.

A - கண்டி இராச்சியத்தின் ஆரம்ப ஆட்சியாளன்

B - 1521 விஜயபாகு கொள்ளைக்கு உட்பட்ட மன்னன்

C - தர்மபால இளவரசனின் தந்தை

D - மாயாதுன்னைக்கு படையுதவி வழங்கிய கலிங்க மன்னன்

3) "போர்த்துக்கேயர் கோட்டை இராச்சியத்தின் உரிமையாளரானமை ஆட்சியில் காணப்பட்ட உட்பூசல்களே காரணம்" இக்கூற்றினை ஆதாரங்களுடன் விளக்குக.

4) 1766 உடன்படிக்கை ஒல்லாந்தருக்கு வாய்ப்பாக அடைந்த விதத்தினை விளக்குக.

(6) 1) கோல்புறூக் சீர்த்திருத்தத்தில்நீதித்துறை தொடர்பாக ஆராய வந்தவரைப் பெயரிட்டு இச்சீர்த்திருத்தம் கொண்டு வரப்பட்டமைக்கான காரணங்கள் இரண்டினை தருக.

2) சட்டவாக்கக் கழகத்தின் உத்தியோக சார்பற்றவர்களான நியமிக்கப்பட்ட நான்கு இனத்தவரைப் பெயரிடுக.

3) இச்சீர்த்திருத்தத்தினை நடைமுறைப்படுத்துவதில் அடிப்படைக் காரணமாயமைந்த ஆளுநரின் அதிகாரங்களைக் குறைப்பது எனும் விடயம் எந்தளவிற்கு வெற்றியளித்தது என்பதனை விளக்குக.

4) 1848 சுதந்திர கிளர்ச்சிக்கு கோல்புறூக் சீர்த்திருத்தம் காரணமாயமைந்த விதத்தினை இரு காரணிகளின் அடிப்படையில் விளக்குக.

(7) 1) விவசாயக் குடியேற்றங்கள் தோற்றம் பெறுவதில் செல்வாக்கு செலுத்திய 03 காரணங்களை எழுதுக.

2) சுதந்திரத்திற்கு முன்னர் சுதந்திரத்திற்குப் பின்னர் தோற்றம் பெற்ற விவசாயக் குடியேற்றங்கள் இவ்விரண்டினை A, B எனப்பிரித்துப் பெயரிடுக.

3) விவசாயக் குடியேற்றங்கள் அமைக்கப்பட்டதன் நோக்கங்களை சுருக்கமாக விளக்குக.

4) முதன் முதலில் விவசாய குடியேற்றங்களை அமைக்கும் போது அரசாங்கம் எதிர்நோக்கிய பிரச்சினைகளை விளக்குக.

பகுதி - III

(8) 1) கத்தோலிக்க திருச்சபையின் ஊழல்களை விமர்சித்தவர்கள் மூவரைப் பெயரிடுக.

2) கீழே A, B, C, D எனத்தரப்பட்டுள்ள விடயங்களைக் கண்டறிந்தோரை அதே ஒழுங்கில் பெயரிடுக.

A - மனித உடலின் குருதிச்சுற்றோட்டம்

B - வியாழன் கிரகத்தின் துணைக்கோள்

C - கிரகங்கள் சூரியனை சுற்றி வலம் வருகின்றன

D - அச்சியந்திரம்

3) 1453 இல் துருக்கியர் கொன்ஸ்தாந்திநோபிளை கைப்பற்றியமையால் ஐரோப்பியர் எதிர்நோக்கிய பிரச்சினைகளை எழுதுக.

4) மறுமலர்ச்சி இலங்கையில் ஏற்படுத்திய தாக்கத்தினை பொருளாதாரம் மற்றும் சமூக பண்பாட்டு ரீதியாக விளக்குக.

(9) 1) முதலாம் உலகயுத்தத்தில் மத்திய ஐரோப்பிய வல்லரசுக்களின் அணியில் இருந்த நாடுகள் மூன்றினை பெயரிடுக.

2) முதலாம் உலக யுத்தத்தின் முடிவில் 1919 இல் பாரிஸ் கலந்துரையாடலில் கலந்து கொண்ட தலைவர்களின் பெயர்களை ABCD என்ற ஒழுங்கில் எழுதுக.

A - ஐக்கிய அமெரிக்க குடியரசு

B - பிரித்தானிய பிரதமர்

C - பிரான்சிய பிரதமர்

D - இத்தாலியின் பிரதமர்

3) a. ஜேர்மனிக்கு தண்டனை வழங்குவதற்காக நிறைவேற்றப்பட்ட உடன்படிக்கை யாது?

b. ஜேர்மனிக்கு எவ்வாறு தண்டனை வழங்கப்பட்டது என விவரிக்குக.

4) உலக சமாதானத்தைப் பேணுவதில் சர்வதேச சங்கம் தோல்வியுற்றமைக்கான காரணங்களை விளக்குக.

(36) இலங்கை தேசிய சங்கத்தின் முதலாவது தலைவர் யார்?

(1) சேர்.பொன் அருணாசலம் (2) சேர்.பொன். இராமநாதன்

(3) சேர்.டீ.பீ.ஜயதிலக (4) எப். ஆர். சேனாநாயக்க

- பின்வரும் **A** மற்றும் **B** விடயங்களை வாசித்து 37 - 38 வினாக்களுக்கு விடையளிக்குக.

A - போல்ஷவிக் கட்சி B - முத்திரை வரி

(37) ரஷ்யப் புரட்சியுடன் தொடர்புடையது

(1) A மற்றும் B பொய்யானவை (2) A உண்மை ஆனால் B உண்மையல்ல

(3) A மற்றும் B உண்மையானவை (4) B உண்மை ஆனால் A உண்மையல்ல

(38) அமெரிக்க சுதந்திரப் போர் தொடர்பானது

(1) A மற்றும் B உண்மையல்ல (2) B உண்மை ஆனால் A உண்மையல்ல

(3) A மற்றும் B உண்மை (4) A உண்மை ஆனால் B உண்மையல்ல

- பின்வரும் **AB** விடயங்களை கொண்டு 39, 40 ஆகிய வினாக்களுக்கு விடையளிக்குக.

A - சர்வவேதேச சங்கம் B - ஐக்கிய நாடுகள் தாபனம்

(39) முதலாம் உலகயுத்தம் தொடர்பாக

(1) A மற்றும் B உண்மையல்ல (2) A மற்றும் B உண்மை

(3) A உண்மையல்ல ஆனால் B உண்மை (4) A உண்மை ஆனால் B உண்மையல்ல

(40) இரண்டாம் உலகயுத்தம் தொடர்பாக

(1) B உண்மை ஆனால் A உண்மையல்ல (2) A மற்றும் B உண்மையல்ல

(3) A மற்றும் B உண்மை (4) A உண்மை ஆனால் B உண்மையல்ல